மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.
அ.வ.எண்.47/2018

2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ஆம் நாள் வாதி/பிரதிவாதி என்பவரின் சாட்சியமாகிய இன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்டவிதி ஏற்பாட்டின்படி செல்வி. B. தீப்கா,B.A.B.L.(Hons)., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | **PW** 1 | **சிவநேசன்** | தாலுக்கா: | |
| தகப்பனார் பெயர் : | | கோவிந்தசாமி | சமயம்: | |
| கிராமம்: | | | வயது: | |
| தொழில்: | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.08.2022.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் அகஸ்தியம்பள்ளி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்து உள்ள சாட்சிய நிருபண வாக்குமூலத்தில் கண்டு உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். நான் இந்த வழக்கில் 7ஆம் வாதி ஆவேன். நான் எனக்காகவும் இதர வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். 06.08.1983ஆம் தேதியில் 2ஆம் வாதியின் தகப்பனார் பெற்ற கிரய சாசனம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 01.09.1979ஆம் தேதியிட்ட 2ஆம் வாதியின் தகப்பனார் பெற்ற கிரய சாசனம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 29.07.2005ஆம் தேதியிட்ட 3ஆம் வாதிக்கு 1ஆம் பிரதிவாதி வழங்கிய குத்தகை ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 18.08.1984ஆம் தேதியிட்ட 4ஆம் வாதி பெற்ற கிரய சாசனத்தின் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 15.12.2021ஆம் தேதியிட்ட 5ஆம் வாதிக்கு 1ஆம் பிரதிவாதி வழங்கிய குத்தகை ரசீது அசல் வா.சா.ஆ.5ஆகவும், 03.05.2008ஆம் தேதியிட்ட 5ஆம் வாதிக்கு 1ஆம் பிரதிவாதி வழங்கிய குத்தகை ரசீது அசல் வா.சா.ஆ.6ஆகவும், 26.02.2008ஆம் தேதியிட்ட 6ஆம் வாதிக்கு 1ஆம் பிரதிவாதி வழங்கிய குத்தகை ரசீது அசல் வா.சா.ஆ.7ஆகவும், 05.10.1994ஆம் தேதியிட்ட 7ஆம் வாதிக்கு 1ஆம் பிரதிவாதி வழங்கிய குத்தகை ரசீது அசல் வா.சா.ஆ.8ஆகவும், 10.09.1949ஆம் தேதியிட்ட 8ஆம் வாதியின் பாட்டனார் நடேசப் பிள்ளை பெயரில் ஏற்பட்ட கிரய சாசனம் அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 01.12.1945ஆம் தேதியிட்ட 1ஆம் பிரதிவாதி 9வது வாதியின் பாட்டனார் ராமுப்பிள்கைக்கு எழுதிக்கொடுத்த குத்தகை பத்திரம்

அசல் வா.சா.ஆ.10 ஆகவும், 07.10.2009ஆம் தேதியிட்ட 10 ஆம் வாதிக்கு 1ஆம் பிரதிவாதி வழங்கிய குத்தகை ரசீது அசல் வா.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.